**தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்கு - 2018**

-----------------------------------------------------------------------------------------

## 1.1 அபிப்பிராயம்

------------------------

தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு காலக்கிரமத்தில் சமர்ப்பிக்கப்படுகின்றது.

ஆணைக்குழுவின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிறுவனத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியற்ற அபிப்பிராயத்திற்கான அடிப்படை

-----------------------------------------------------------------------------------

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

---

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஆணைக்குழு அலுவலகத்தால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக்கூடிய வகையில் அதனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் ஆணைக்குழு அலுவலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிறுவனத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின்

மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின்தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான அற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிதியத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிதியம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பிலான உள்ளக கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்களின் முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் நடைமுறைப்படுத்தல், உரிய நிதியிடல் நியமங்களுக்கிணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்கான கணக்கறிக்கையை பேணுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் குறிப்பான அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களுக்கு பிரவேசித்தல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணகளித்தகைமை பேணப்பட்டு சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியினுள் ஒப்பிடல் மற்றும் வேறுபாடுகள் காணப்படுமாயின் அவை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுத்தல் ஆகியவற்றுக்காக நியாயமான உறுதிப்பாடொன்றை பெற்றுக்கொள்ள போதியளவான ''சிறப்பான முறையில் திட்டமிடப்பட்ட'' உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு கட்டமைப்பொன்றினை நிறுவனத்தினால் நடாத்திச் செல்லப்படல் அவசியமானதாகும்.

## 1.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

இது தொடர்பில் பின்வரும் வியடங்கள் அவதானிக்கப்பட்டன.

| அவதானிப்பு | | | | |
|---|---|---|---|---|
| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| (அ) | 1994 இன் 11 ஆம் இலக்க விஞ்ஞான தொழில்நுட்ப மேம்பாட்டுக்கான சட்டத்தின் (ஆ) பிரிவு | அரச மற்றும் தனியார் துறை முயற்சிகளினால் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பத்தை பயன்படுத்துவது தொடர்பாக கடந்த ஆண்டு இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட விஞ்ஞான தொழில்நுட்ப நடவடிக்கைகளின் மீளாய்வு | 2017 ஆம் ஆண்டுக்கான விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நடவடிக்கைகளின் மீளாய்வு அறிக்கைக்கான விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களினால் | சட்டத்தின் ஏற்பாடுகளின் படி செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அறிக்கையின் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படவில்லை. 2017 ஆம் ஆண்டுக்கான அறிக்கையும் ஆரம்ப கட்டத்திலேயே இருந்தது. | எமக்கு தகவல்கள் அனுப்பி வைக்கப்படுவது தாமதம் அடைந்தமையினால் குறித்த தகவல்களை உட்படுத்தி மீளாய்வு செய்யப்பட்ட அறிக்கையை தயாரிப்பதற்கு 2018 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்ய முடியாது போய்விட்டது. 2018 ஆம் ஆண்டுக்கான மீளாய்வு அறிக்கை 2019 ஆம் ஆண்டு இறுதி காலாண்டில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | |
| (ஆ) | பொது முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் 2016 ஒக்டோபர் 7 ஆம் திகதிய மற்றும் இலக்கம் PED/1/2005(i) சுற்றறிக்கை | அதிகாரியொருவர் மாதாந்த எரிபொருள் கொடுப்பனவு மற்றும் போக்குவரத்து கொடுப்பனவை பெற்று கொண்டால் நிறுவனத்தின் வாகனங்கள் அல்லது சாரதிகளை கடமை மற்றும் தனிப்பட்ட விவகாரங்களுக்கு பயன்படுத்த முடியாது என அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் ஆணைக்குழுவின் பணிப்பாளரினால் அதற்கு முரணாக ஆணைக்குழுவுக்கு சொந்தமான வாகனங்கள் மற்றும் சாரதிகளை 02 சந்தர்ப்பங்களில் பயன்படுத்தியுள்ளனர். | இது தொடர்பாக NASTEC நிறுவனத்தின் உள்ளக பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள மூவரடங்கிய குழு கண்டறிந்து வருவதுடன், அதன் அறிக்கைக்கு ஏற்ப செயற்படவுள்ளது. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு ஏற்ப செயற்பட வேண்டும். |
| (இ) | திறைசேரியின் | அரச தொழில் முயற்சிகள் | சபையின் பணிப்பாளர் | சுற்றறிக்கையின் |

| | | | |
|---|---|---|---|
| செயலாளரது 2010 டிசெம்பர் 10 ஆம் திகதி மற்றும் 1/2010 ஆம் இலக்க சுற்றறிக்கையின் (i)(ஊ) பிரிவு | மற்றும் பல்கலைக்கழக கல்விசார ஊழியர்களின் சிரேஸ்ட தர பதவி வகிக்கும் 12 ஆண்டுகால நேரடி சேவை காலத்தை பூர்த்தி செய்துள்ள நிறைவேற்று அதிகாரிகளுக்கு தீர்வையற்ற வாகன அனுமதி பத்திரம் ஒன்றை வழங்க முடியும் எனினும் ஆணைக்குழுவின் பணிப்பாளரது சேவை 2003 ஜூலை 8 ஆந் திகதி தீர்வையற்ற வாகன அனுமதி பத்திரம் ஒன்றை சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக வாகனம் ஒன்றை இறக்குமதி செய்துள்ளார். | 1999 ஜனவரி 01 ஆந் திகதி ஒப்பந்த அடிப்படையில் விஞ்ஞான நிகழ்ச்சி முகாமையாளர் (தரம் II) பதவிக்காக ஈராண்டுகளுக்கு இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர் . இந்த ஒப்பந்தம் இடையிடையே தொடர்ந்து 2003 ஜூலை 3 ஆம் திகதி வரை மேற்படி பதவி காலம் நீக்கப்பட்டுள்ளது. 2003 ஜூலை 31 ஆம் திகதி அவர் பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள் ளனர்.<br><br>இதே நேரம் DMS 30 சுற்றுநிரூபத்திற்கு ஏற்ப 2007.02.13 ஆம் திகதி அவருக்கு MM 1-3 சம்பள பிரிவில் முதலாம் தரத்திற்கு உள்வாங்கப்பட்டுள்ள னர்.<br><br>2011 ஆம் ஆண்டு அவர் பெற்று கொண்ட வாகன அனுமதி பத்திரத்தை நோக்கும் போது அவர் ஒப்பந்த காலத்துடன் 12 ஆண்டுகள் குறைந்தபட்சம் நேரடி சேவை காலத்தை | ஏற்பாடுகளுக்கு ஏற்ப செயற்பட வேண்டும் என்பது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | பூர்த்தி செய்துள்ளதுடன், ஒப்பந்த காலத்தை கவனத்திற்கொள்ளல் குறைந்தபட்சம் 12 ஆண்டு சேவை காலத்தை பூர்த்தி செய்யவில்லை.<br><br>2011 ஆம் ஆண்டு குறித்த சுற்றுநிருபத்தின் TTIP/01/2010 நேரடி சேவை காலத்திற்கு ஒப்பந்தக்காலம் உள்ளடக்குவதா இல்லையா என்பது தெளிவாக குறிப்பிடப்படவில்லை. | |
| (ஈ) | 2003 ஜுன் 2 ஆம் திகதி மற்றும் இலக்கம் PED/12 பொது நிறுவன சுற்றறிக்கையின் 7.4.1 பந்தி | கணக்காய்வு குழு 03 மாதங்களுக்கு ஒரு தடவையேனும் கூட வேண்டியிருந்த போதிலும் ஆணைக்குழுவினால் 2018 ஆம் ஆண்டில் ஒரு கணக்காய்வு குழுவை மாத்திரமே கூட்டியுள்ளது. | இவ்வாண்டு 4 கணக்காய்வு குழு கூட்டங்களை நடத்த திட்டமிட்டிருந்த போதிலும் ஆண்டின் முதல் காலாண்டில் நிறுவனத்தில் நிலவிய நெருக்கடி நிலை தலைவர் ஒருவர் இல்லாமை ஆண்டு இறுதியில் நாட்டில் ஏற்பட்ட நிலைமைகள் போன்றவற்றினாலும் ஏனைய தவிர்க்க முடியாத காரணங்களினாலும் 3 கணக்காய்வு குழு கூட்டங்களை நடத்த முடியவில்லை சுற்றறிக்கையின் படி | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு ஏற்ப செயற்படுவது. |

## 2. நிதி மீளாய்வு

------------------------

### 2.1 நிதி விளைவுகள்

--------------------------------

மீளாய்வாண்டின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் பெறுபேறு ரூபா 4,510,610 ஆன மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை 4,141,953 ஆகும். அதற்கமைய நிதி விளைவுகளில் ரூபா 8,652,563 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு மீளாய்வாண்டில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்காக வழங்கப்பட்டிருந்த மூலதன ஒதுக்கீடு ரூபா 8.655,500 இனால் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

### 2.2 பிரதான வருமான மற்றும் செலவின விடயங்களின் போக்கு தொடர்பான மீளாய்வு

---------------------------------------------------------------------------------------------------------------------

நடப்பாண்டில் முக்கிய வருமான விடயமொன்றான மற்றும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மூலதன கொடுப்பனவு ரூபா 8,655,500 இனால் அதிகரித்துள்ளதுடன் அது கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 85 சதவீத வளர்ச்சியாகும். அதற்கு இணைவாக ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செலவு ரூபா 1,224,376 இனால் அதிகரித்துள்ளது.

### 2.3 விகதிப் பகுப்பாய்வு

-----------------------------

2018 ஆம் ஆண்டு நடைமுறை விகிதம் விரைவு விகிதம் முறையே 4:12:1 மற்றும் 1.1.1 ஆக இருந்ததுடன் 2017 ஆம் ஆண்டில் அந்த விண்ணப்பங்கள் முறையே 0.28.1 மற்றும் 0.26.1 ஆக இருந்தது. 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் செயற்பட்டு மூலதனத்தின் அதிகரிப்பொன்று காணப்பட்டது. இவ் வளர்ச்சிக்கு மீளாய்வாண்டின் காசு மற்றும் காசுக்கு சமனான விடயங்கள் ரூபா 7,170,708 ஆக அதிகரித்தமை முக்கிய காரணமாகும்.

## 3. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

## 3.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

இது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டங்களின் படி நிறுவனத்தின் மீளாய்வு 6 நிறுவனங்களுக்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 3 நிறுவனங்களின் மீளாய்வு மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. | 2018 ஆம் ஆண்டு மீளாய்வுக்காக 3 நிறுவனங்களிடம் இருந்து கிடைக்க வேண்டிய ஆரம்ப மதிப்பீட்டு அறிக்கை (Self Assessement Report) அவ் வருடங்களில் எமது நிறுவனத்திற்கு வழங்க முடியாமைக்கான காரணம் அந் நிறுவனங்களின் மீளாய்வு நடவடிக்கைகள் 2018 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யமுடியவில்லை.<br><br>நிறுவனங்களினால் தரவுகளை திரட்டுவது அதனை முறையாக முன்னெடுக்கும் நோக்கில் தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப துறையை முன்னேற்றும் போது கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி வர்த்தமானி அறிவித்தல் ஒன்றை வெளியிட புதிய ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது. | வருடாந்த செயல் நடவடிக்கை திட்டதின்படி ஆண்டில் நிறைவேற்ற திட்டமிடப்பட்டிருந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | விஞ்ஞான ரீதியான மற்றும் தொழில்நுட்ப ரீதியான பிரச்சினைகள் தொடர்பாக தற்போதைய முக்கியத்துவம் குறித்து ஆய்வுக்குழுக்கள் (study Group) களினால் 2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டிருந்த கொள்கைகளை அறிக்கையிடுவது மற்றும் கொள்கைகளை பரிந்துரைப்பதை பூர்த்தி செய்ய முடியாமல் போய்விட்டது. | 2018 ஆம் ஆண்டு மேற்கொள்ள திட்டமிடப்பட்டிருந்த 3 கொள்கை அறிக்கைகள் (Draft Level) வரைவு மட்டத்தில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. 9 ஆவது இரட்டை வருடாந்த தொழில்நுட்ப மாநாட்டுக்கு இணைவாக தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப கொள்கைகள் மூன்றினை தயாரிக்க திட்டமிடப்பட்டு குறித்த புத்தி ஜீவிகள் குழு கூட்டங்களை நடாத்திய போதிலும் குறித்த மாநாட்டை 2018 ஆம் ஆண்டில் நடத்த முடியாமையினால் அந்த கொள்கைகளை அவ்வாண்டில் பூர்த்தி செய்ய முடியாமல் போய்விட்டது. | வருடாந்த செயல் நடவடிக்கை திட்டதின்படி ஆண்டில் நிறைவேற்ற திட்டமிடப்பட்டிருந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | விஞ்ஞான தொழில்நுட்ப கல்வி மற்றும் திட்டமிடல்கள் ஊடாக பூர்த்தி செய்ய வேண்டிய தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப கொள்கைகள் மூன்று ஆண்டில் பூர்த்தி செய்ய வேண்டியிருந்த போதிலும் அவை பூர்த்தி செய்யப்படவில்லை. | 2018 ஆம் ஆண்டு மேற்கொள்ள திட்டமிடப்பட்டிருந்த 3 கொள்கை அறிக்கைகள் (Draft Level) வரைவு மட்டத்தில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. 9 ஆவது இரட்டை வருடாந்த தொழில்நுட்ப மாநாட்டுக்கு இணைவாக தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப கொள்கைகள் மூன்றினை தயாரிக்க திட்டமிடப்பட்டு குறித்த புத்தி ஜீவிகள் குழு | வருடாந்த செயல் நடவடிக்கை திட்டதின்படி ஆண்டில் நிறைவேற்ற திட்டமிடப்பட்டிருந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | கூட்டங்களை நடாத்திய போதிலும் குறித்த மாநாட்டை 2018 ஆம் ஆண்டில் நடத்த முடியாமையினால் அந்த கொள்கைகளை அவ்வாண்டில் பூர்த்தி செய்ய முடியாமல் போய்விட்டது. | |
| (ஈ) | ஒன்பதாவது இரட்டை வருடாந்த விஞ்ஞான தொழில்நுட்ப மாநாடு (Biennial conference on Science and technology IX) நடத்துவதற்கு ஆணைக்குழு நடவடிக்கை எடுக்கவில்லை. | ஒன்பதாவது இரட்டை வருடாந்த விஞ்ஞான தொழில்நுட்ப மாநாடு 2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் கௌரவ ஜனாதிபதி தலைமையில் நடாத்த திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அக்காலப்பகுதியில் நாட்டில் ஏற்பட்ட நிலைமைகள் காரணமாக அம்மாநாடு இடம்பெறவில்லை. ஆணைக்குழுவினால் குறித்த மாநாட்டை 2019 ஆம் ஆண்டு நடத்த தீர்மானிக்கப்பட்டது. | வருடாந்த செயல் நடவடிக்கை திட்டதின்படி ஆண்டில் நிறைவேற்ற திட்டமிடப்பட்டிருந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3.2 உள்ளக கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 13 இன் படி ஆணைக்குழுவினால் பணிகளை பரிசீலனை செய்வது தொடர்பாக உள்ளக கணக்காய்வு பிரிவொன்று ஏற்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு | அமைச்சின் உள்ளக கணக்காய்வு பிரிவினால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். | தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

மேற்கொள்ளப்படவில்லை.
அமைச்சின் உள்ளக கணக்காய்வு பிரிவினால் கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அந்த கணக்காய்வினால் ஆணைக்குழுவினால் பணிகள் கணக்காய்வுக்குட்படுத்தப்பட்டதாக வும் உள்ளக கணக்காய்வு அறிக்கை நிதிப்பிரமாணம் 133(3) பிரிவின் பிரகாரம் கணக்காய்வுக்கு அனுப்பப்படவில்லை.